www.padippakam.com


# ஏழைதாசன்

- திங்கள் இலக்கிய இதழ் -

- 11 - 5,6
- மார்ச் - 2003
- இதழ் எண் : 104
- விலை ரூ. 3/-


- எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்

— *கண்ணதாசன்*

◆◆◆ உலகெங்கும் வாசகர்களைக் கொண்ட ஏழைதாசனுக்கு இதுவரை சொந்தமாக தொலைபேசி இல்லாமல் இருந்தது. இதோ புதிய இணைப்பு கிடைத்து விட்டது. இனி எந்நேரமும் எம்மோடு கதைக்கலாம். அழைக்க வேண்டிய எண்கள்: **0091 - 04322 - 226426** ◆◆◆

## இருக்கும் போது இரத்ததானம்! இறந்த பின்பு கண்தானம்!



**டாக்டர் பெ. விஜயகுமார்,**
நிறுவனர்,
*அமிர்தம் சமூக சேவை நிறுவனம்,*
புத்தூர்,
திருச்சி - 620 017.

'வெற்றிச்செல்வன்' எனும் புனைப்பெயரில் கவிதை எழுதி வரும் இவர், விபத்துக் குள்ளான சிலருக்கு இதுவரை எட்டு தடவை இரத்ததானம் செய்துள்ளார். இறப்பிற்கு பின்பு கண்களை தானமாக கொடுக்க ஒப்புதல் அளித்து உள்ளார். ஏழை எளியோர்க் காக தையற் பள்ளி, கணினி மையம், சிறுதொழில்பயிற்சி மையம், யோகாசனபயிற்சி மையம், முதியோர் இல்லம் என தன்னலம் கருதாமல் சேவையாற்றுகிறார்.

படிப்பகம்



# தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன் இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர்

## A.தேவராஜன், R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்

**எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு (அறுவை சிகிச்சை இன்றி) முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும், சிகிச்சையும் அளிக்கப்படும். ஆண்மைகுறைவு, சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு.**

மருத்துவத் துறையில் 46 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 75 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ்' நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எயிட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிக்கையாளர்களாலும் பாராட்டப்பெற்றவர்.

சித்த மருத்துவ மேதை அரிமா டாக்டர் **A.தேவராஜன்**, R.M.P.(IND)C.B.I.M.
**மனோன்மணி மருத்துவமனை**
7-3/125 பெருமாள்கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 435695

பிரதிமாதம் 10,25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர் D.C. செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம் பேரையூர் வர விரும்பினாலும் வரலாம். தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் D.C. **செங்குட்டுவன்** B.Sc.D.H.M.S.,
டாக்டர் **பிரீதா செங்குட்டுவன்** D.H.M.S.,
போன் : (0452) 521354 (கிளினிக்)
650692 (வீடு)

## ஹோமியோ ஹோம்

**பிரீதா கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்**
*S-7, கிங்ஸ் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில்,*
*அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம்:
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம்
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# POEMS AND PRAYERS FOR BOB SPIESS



**ROBERT SPIESS**

☆
Something of you, too -
in the river's reflection
spring light
- Marjorie Buettner

☆
hospice window -
in and out of view
the cardinal
- Tom Clausen

☆
on quiet waters
beyond Mendota's shores
you row a new boat
- L.A. Davidson

☆
Spiess's pebbles
creating countless ripples
reaching disitant shores
- Robert Deluty

☆
mourning doves
gather in the yard
a shaft of sun
- Kim Dorman

☆
Melting snow
On his desk, notebook and pen
A final haiku
- Bruce H. Feingold

☆
sudden freeze
star magnolias quiver
in moonlight
- Lori Laliberte-Carey

☆
high above
'The Cottage of Wild Plum'
a V of snow geese
- Elizabeth searle Lamb

☆
a warm breeze
uniting the waves
above, a trumpeter swan
- Liz Fenn

☆
bootprints in snow
one
at a time
- Daniel fusch

☆
moonlight on the marsh...
above the reeds and sedges
floats a new bird's voice
- Robert Gilliford

☆
climbing a ladder
a hand and a smile
from above
- Kay Grimnes

☆
march 13th:
bob
missing
(missing) bob
- Lee Gurga

☆
a Clearing wind
through the mountain pass -
cerulean sky
- penny Harter

☆
sunset cloudbreak
from this trumbly hole and that
a mole's star nose
- Elizabeth Hazen

☆
hospice terrace
the old caribbean straw hat
shades his face
- Jerry Kilbride

- *Thanks to : Modern Haiku, U.S.A.*



படிப்பகம்

www.padippakam.com

# சீன வானொலி நேயர் மன்ற பரிசளிப்பு விழா

திருச்சியில் அனைத்திந்திய சீன வானொலி நேயர் மன்றத்தின் 14-வது கருத்தரங்கும் பரிசளிப்பு விழாவும் டிசம்பர் 8-ம் தேதி நடைபெற்றது.

சீன வானொலி கடந்த 40 ஆண்டுகளாக சிறந்த தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது. சீன வானொலியின் தமிழ் ஒலிபரப்பினை இந்திய நேரப்படி இரவு 7.30 மணி முதல் 8.30 மணிவரை 19.7, 25.9, 31.2 ஆகிய மீட்டர் சிற்றலை எண்களில் கேட்கலாம். சீன வானொலி தமிழ் ஒலிபரப்பில் பணிபுரியும் சீனர்கள் அனைவரும் தமிழ்நாடு மற்றும் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கற்று தமிழில் புலமை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு சீன வானொலி தமிழ் ஒலிபரப்பின் 40-ம் ஆண்டை விமரிசையாகக் கொண்டாடும் பொருட்டு நேயர்களுக்கு அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்ட இலவச கடித உறைகளை வழங்கி புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேயர்கள் எழுதும் கடிதங்களுக்கான பதில் கடிதத்துடன் இலவச கடித உறைகளையும் இணைத்து அனுப்பி வைக்கின்றனர். மேலும் தொலை பேசி மூலம் நேயர்களுடன் தொடர்பு கொண்டு, உலகின் கவனத்தை ஈர்த்த முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய கருத்துக்களைக் கேட்டு அவற்றை நேருக்குநேர் என்ற நிகழ்ச்சியின் மூலம் அவ்வப்போது ஒலிபரப்பி வருகின்றனர்.



தி. கலையரசி (எ) சூஜீவன்ஹீவா

அனைத்திந்திய சீன வானொலி நேயர் மன்றத்தின் 14-வது கருத்தரங்கும் கடந்த ஆண்டு நடைபெற்ற சீன வானொலியின் 60-ஆண்டுகள் தொடர்பான பொது அறிவுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற நேயர்களுக்கான பரிசளிப்பு விழாவும் டிசம்பர் 8-ம் தேதி, காலை 10 மணிக்கு, திருச்சி இ.ஆர். மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது.

அனைத்திந்திய சீன வானொலி நேயர் மன்றத்தின் தலைவர் எஸ். செல்வம் தலைமை வகித்தார். திருச்சி மாவட்ட சீன வானொலி நேயர் மன்ற தலைவர் எம். தேவராஜா வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக பள்ளி தாளாளர் டி.எம். சீனிவாசன், தலைமை ஆசிரியர் கோதாண்டராமன், தினமலர் இணை ஆசிரியர் ஆர். ராமசுப்பு, திருச்சி வானொலி நிலைய இயக்குநர் வாக்ஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

தமிழ்ப்பிரிவு தலைவர் தி. கலையரசி (எ) சூஜீவன்ஹீவா தலைமையில் சீன வானொலி தென் ஆசிய மொழிப் பிரிவு தலைவர் உட்பட ஆறுபேர் கொண்ட சீன வானொலி பிரதிநிதி குழுவினர் நேயர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசினார்கள். அனைத்திந்திய சீன வானொலி நேயர் மன்ற பொதுச் செயலாளர் பல்லவிபரமசிவன், திருச்சி மன்ற கௌரவ தலைவர் சேவா ரத்னம், கண்ணபிரான் நாயுடு ஆகியோரும் பேசினார்கள். ராதாகிருஷ்ணன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நிறைவில் சீதாராமன் நன்றி கூறினார்.

கருத்தரங்கில் கலந்து கொள்ள 7-ம் தேதி பிற்பகல் 1.45 மணிக்கு திருச்சி விமான நிலையத்தில் வந்திறங்கிய சீன வானொலி பிரதிநிதிக் குழுவினரை வரவேற்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன..



படிப்பகம்

www.padippakam.com

# புது வருட நல்வாழ்த்துக்கள்



ஆண்டு தோறும் அவதரிக்கும் ஆண்டவரே!
உலகில்
அசைந்தாடும் தென்றலெல்லாம்
நீர்தானே! - எம்மை
தேடிவரும் சமாதானம் - இப்
புத்தாண்டில் - எல்லோர்க்கும்
கோடி இன்பம் கொடுக்கட்டும்
ஆண்டவரே.

பேசுகின்ற மொழிக்காக - தம்
மூச்சையே கொடுத்தவரும்
தேசத்தின் விடுதலைக்காய் - நல்
வாசமாய்ப் போனோரும்
நாசகரின் வஞ்செயலால்
இடை நடுவில் போனோரும்
ஆண்டவரே உம்போல
மீண்டும் பிறக்க வேண்டும்.

உலகத்து மக்களெல்லாம்
மகிழ்ச்சியோடு வாழவேண்டும்.
உலகமெல்லாம் சமாதானப்
புறாக்கள் பறக்க வேண்டும். - எம்
தாயகமாம் ஈழத்தில்
தழைத்துவரும் சமாதானம்
மலருகின்ற புத்தாண்டில்
நிலைத்தே நிற்கவேண்டும்.

பாசமுள்ள உறவுகளே!
நேசமுள்ள கலைஞர்களே! - உங்கள்
முகத்தான் யேசுரட்ணம்
உரிமையோடு கூறும்
நத்தார் புதுவருட
நல்வாழ்த்துக்கள்!.

முகத்தார் யேசுரட்ணம்,
பிரான்சு.

# பொங்கலோ பொங்கல்!

பொங்குக தமிழே பொங்கிப் பரவுக
இந்தப் பூதலமெங்கும்
தங்கும் தடையின்றி தமிழினில் பேசி
தமிழருக்கு அருளுக தைப்பொங்கலே!

இஞ்சியும் மஞ்சளும் கை குலுக்கும்
இனிய பொங்கல் பிறந்திடுக, சிறந்திடுக
இதயமும் நேயமும் கைகுலுக்கும்
இன்பமுடன் பொங்கிடுக சிறப்புடன்!

வலிமையும் வாகையும் கைகுலுக்கும்
வளம்சேர் எண்ணம் மலர்ந்திடுக
புதுமையும் பூரிப்பும் கைகுலுக்கும்
புகழ்சேர் வாழ்க்கை பொலிந்திடப் பொங்குக!

கிழக்கு வானும் கதிரும் கைகுலுக்கும்
கீழ்வானம் விடியல் விரைந்து வந்ததென
உழவன் உழைப்பில் வசந்தம் கைகுலுக்கும்
உள்ளம் மகிழ்ந்து பொங்கிடு தமிழா!
இனிய தைப் பொங்கலை,
பொங்கலோ பொங்கல்
புதுவருடப் பொங்கல்
எம் தமிழ்ஈழத்தில் இனிமையான
பொங்கல்
மக்கள் மனத்தினில் உள்ளம்
மகிழ்ந்த பொங்கல்
பொங்கலோ பொங்கல்
என்று மகிழ்வுடன் பொங்கிடுவோம்!

இணுவையூர்
பத்மாவதி சீவரட்ணம்,
கனடா.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ச்சிற்றிதழ்ச் சங்க மாநாட்டில் பங்கேற்ற புதுக்கோட்டை 'ஏழைதாசன்' இதழ் ஆசிரியர் எஸ். விஜயகுமாரை மாநாட்டு அமைப்பாளரும் நந்தவனம் இதழ் ஆசிரியருமான த. சந்திரசேகர் ஆரத்தழுவி மகிழ்ச்சிப் பொங்க கட்டி அணைத்து வரவேற்ற போது எடுத்தப் படம்.



புதுக்கோட்டை 'ஏழைதாசன்' எஸ். விஜயகுமார், அறந்தை டாக்டர் எம்.எஸ். கோவிந்தராஜன், மதுரை வாசகர் தி. ரெங்கசாமி, சேலம் இதழாளர், விழுப்புரம் ஜலில் அகமது ஆகியோர் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்க மாநாட்டில் கலந்து கொண்ட போது எடுத்தப் படம்.



படிப்பகம்

www.padippakam.com

# மின் - பாக்கள்

பசியால் அழும் பிள்ளைக்கு
பட்டுச் சட்டை உறுதிமொழிபோல்
யாழ்குடா மீனவர்க்கு மந்திரி உறுதிமொழி!

கட்டைக் கொடியில் கட்டிய
மேய்ச்சல் பசுக்களே
அன்னிய நாட்டு அகதிகள்!

அழகிய தேவகன்னி தோற்றம்
அற்புதமான உடை
நிற்குமிடம் சிவப்புவிளக்கு வீதி!

ஏழையின் கறுப்புப் பாவாடை
கிழிசல் ஓட்டைகள்
புணக்காரனுக்கு வானத்து நட்சத்திரங்கள்!

விசப்பாம்புக்கு பல்லைப் பிடுங்கினாலும்
விசப்பாம்பு விசப்பாம்புதான்
சந்திரிகாவின் அதிகார செயல்பாடு!

தொல்லைக்கு பயந்தாரோ!
தமிழக அரசின்
தொட்டில் குழந்தைகள் திட்டம்!

அழகான தன் முகத்தை மூடும்
கைவிரல் இடைவெளியில் பார்ப்பதே
காதலின் உச்சக்கட்ட அடையாளம்!

வேலணையூர்
**பொன்னண்ணா,**
டென்மார்க்.


படிப்பகம்

www.padippakam.com

அட்டைப்படக் கட்டுரை :

# இருக்கும்போது இரத்ததானம்! இறந்த பின்பு கண்தானம்!

திருச்சிராப்பள்ளி - புத்தூர் பகுதியில் அமைந்துள்ளது அமிர்தம் சமூக சேவை நிறுவனம். 1995-ம் ஆண்டு ஏழை, எளிய மக்களுக்கும், ஆதரவற்றோர்க்கும் உதவும் வகையில் திரு விஜயகுமார் அவர்களால் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. 'ஜீவாமிர்தம்' மாத இதழை நடத்திய இவர், யோகாசனக் கல்வி, டிப்ளமோ தொழிற்கல்வி, அக்கு பஞ்சர் பயின்றவர். 'வெற்றிச்செல்வன்' எனும் புனைப்பெயரில் 10 நூல்கள், 2 ஆடியோ கேசட், 1 சிடி. வெளியிட்டுள்ளார். 100க்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள், பேரிதழ்களில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், நூலாய்வுகள் எழுதியுள்ளார் புகைப்படக் கலைஞராகவும் மிளிரும் இவருக்கு அகவை 28 தான்.

தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு தன்னார்வலர்கள் உறுதுணையுடன் ஏழை, எளியோர்க்கு உதவிபுரிந்து வருகிறார் தொண்டு நிறுவனர் விஜயகுமார், விபத்துக்குள்ளான சிலருக்கு இதுவரை எட்டு முறை இரத்ததானம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இறப்பிற்கு பின்பு கண்களை தானமாக கொடுக்க ஒப்புதல் அளித்துள்ளார்.

.கிராமங்களில் சுயஉதவிக் குழுக்கள் அமைத்து ஒவ்வொரு மகளிர் மன்றத்தினரும் சுயதொழில் புரிய விழிப்புணர்வு முகாமை நடத்தி வருகிறார் திருச்சி மாநகர ஏழை, எளிய மகளிர்க்கு வாழ்வில் ஒளி ஏற்றும் வகையில் தையற் பயிற்சி பள்ளியும், சிறுதொழில் பயிற்சி மையமும் துவங்கி மிக சிறப்பான பயிற்சி அளித்து வருகிறார் மேலும் கணினி பயிற்சி மையம் வைத்து குழந்தைகளுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர் மூலமாக பயிற்சி அளிக்கிறார்.

## முதியோர் இல்லம்

அமிர்தம் சமூக சேவை நிறுவனத்தில் ஆதரவற்ற முதியோர்களுக்கு எழில்மிகு இயற்கைச் சூழலில் சத்தான உணவு, சுவையான சைவ உணவு, சுத்தமான குடிநீர், சுகமான படுக்கை வசதி, சிந்தனையினை தூண்ட நூலகம் என அனைத்து வசதிகளுடன் கூடிய முதியோர் இல்லம் பத்து பேர் தங்கும வசதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதியோர் இல்லத்தில் தங்கும் முதியோர்களுக்கு மாதந்தோறும் மருத்துவ வசதியும், இலவச சட்ட ஆலோசனையும் வழங்கப்படுகிறது. மிகக் குறைந்த கட்டணத்துடன் செயல்ப்டும் முதியோர் இல்லம், திருச்சி வயலூர் செல்லும் வழியில் 'செங்கதிற் சோலை' என்ற பசுமையான இடத்தில்

 படிப்பகம்

www.padippakam.com

கட்டிப்பட்டுள்ளது.

## இலவச சட்ட ஆலோசனை

அமிர்தம் சமூக சேவை நிறுவனத்திற்கு பிரச்சனை என்று வருபவர்க்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படுகிறது. இலவச சட்ட ஆலோசனை வழக்கறிஞர் சித்ரா அவர்கள் சீரிய தலைமையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இப்புனித காரியங்களுக்கு ஒவ்வொரு வகையிலும் தன்னலம் கருதாத கொடை உள்ளங்கள் வழங்கும் நிதியுதவி, பல ஏழை எளியோர் வாழ்வில் வெளிச்சம் கொடுத்திருக்கிறது. தொண்டு நிறுவனத்தின் பணி மென்மேலும் சிறக்க நன்கொடையாளர்கள் சிறு உதவிபுரிவதாக இருந்தாலும் அதன் நோக்கம் பெரியது என்று அன்புடன் ஏற்றுக் கொள்கிறார்கள். நன்கொடைகளை Amirtham Social Service Trust என்ற பெயருக்கு காசோலை, வரைவோலை, பணவிடை அனுப்ப வேண்டுகிறார்கள்.

### அமிர்தம் சமூக சேவை நிறுவனம்,
14/44-பி, பிஷப் குளத் தெரு,
புத்தூர், திருச்சிராப்பள்ளி - 620017.

---

வணக்கம். வாழ்த்துக்கள்!
உங்கள் மட்டும் அதற்கு முன்னர் என் மனைவி விஜய லெட்சுமி பெயருக்கு அனுப்பியிருந்த ஏழைதாசன் திங்கள் இதழ்களும் பெற்றோம்.
சிறுபத்திரிகை நடத்துவதின் சிரமம் அறிகிறேன். இருந்தும் தொடர்ந்து ஒரு இலக்கிய இதழை விடாமுயற்சியோடு நடத்தி வருவது குறித்து மகிழ்ச்சி; பாராட்டுக்கள்.
இத்துடன் ரூ 500 க்கு ஒரு காசோலை வருகிறது.
தங்கள் முயற்சி வெல்க!

● **டாக்டர் வ. மாசிலாமணி,**
கிங் சவுது பல்கலைக் கழகம், சவுதி அரேபியா.

---

கனம் தங்கிய ஆசிரியர் அவர்களே,
என்றும் நலமுடனும் வளமுடனும் வாழ்க!
எனது கவிதைகள் பிரசுரமாகிய இதழ் என் கைவசம் கிட்டியது மிக்க நன்றிகள். தங்கள் சஞ்சிகை மேலும் உருவத்தாலும், உள்ளடக்கத்தாலும் மெருகு பெற்றால் இலக்கிய ஆர்வலர்களுக்குப் பெரு விருந்தாக அமையும் என்பது எனது எண்ணம். அதிக பக்கங்களுடன் அறிவுக் களஞ்சியமாக இந்தச் சிற்றிதழ் வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.
ஏழைதாசனைத் தொடர்ந்து பெற விருப்பம் கொண்டு, வங்கிக் கணக்குக்கு ரூ 500 அனுப்பியுள்ளேன்.
(தொலைபேசி செய்தி)

● **திருமதி ஸ்ரீக்ஷா பாக்கியநாதன்,**
துணை ஆசிரியை, கலைவிளக்கு, ஜெர்மனி.


படிப்பகம்

www.padippakam.com

# அய்க்கூ கவிதைப் போட்டி

## மொத்த பரிசுத் தொகை : ரூ. 1100

| | |
|---|---|
| முதல் பரிசு : | ரூ. 500 |
| இரண்டாவது பரிசு : | ரூ. 300 |
| மூன்றாவது பரிசு : | ரூ. 200 |
| ஆறுதல் பரிசு : | ரூ. 100 |

- ஏழைதாசன் திங்கள் இலக்கிய இதழ் விரைவில் வெளியிட இருக்கும் அய்க்கூ - 500 கவிதைத் தொகுப்பு நூலில் கலந்து கொண்டு வெற்றி பெறும் கவிஞர்களுக்கு மேற்படி பரிசுத் தொகை வழங்கப்படும்.
- உங்கள் பெயர், முகவரி, புகைப்படம், அய்க்கூ கவிதைகள் ஆகியவற்றுடன் ரூ. 25/- மணி-யார்டர் சேர்த்து அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், 'ஏழைதாசன்', புதுக்கோட்டை - 2.

## கடைசித் தேதி : 30 - 04 - 2003.

☆ முன்னதாக அய்க்கூ-500க்கு கவிதைகள் அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்ப வேண்டியதில்லை.

☆ தோழமை இதழாளர்களே, தங்கள் இதழில் இச்செய்தியை வெளியிட்டு, உங்கள் வாசகர்களும் பங்கேற்க செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.


படிப்பகம்

www.padippakam.com

## புற்றுநோய் மருத்துவத்தில் சாதனை புரியும் மரு. தேவூர்ஜி மணிவாசகனுக்கு பாராட்டு

காரைக்கால்
1-1-2003.

அய்யா,

வணக்கம். மூன்று வருடமாக தொண்டைப் புற்று நோயால் பாதிக்கப்பட்டு பல்வேறு சிகிச்சைகள் செய்தும் குணமாகாத நிலையில் மூலிகை மருத்துவர் உயர்திரு. தேவூர்ஜி மணிவாசகத்திடம் மூன்று மாதங்கள் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளேன். இக் கடிதத்தை ஏழை தாசனில் வெளியிட வேண்டுகிறேன்.

என்றும் நன்றியுடன்,
எஸ். ஞானசேகர்,
பெயிண்டர், எம்.ஜி ஆர். நகர்,
பை-பாஸ் ரோடு, காரைக்கால் அஞ்சல்,
பாண்டிச்சேரி மாநிலம்

# இலவச மருத்துவ முகாம்

## துணை கலெக்டர் ராஜாமணி துவக்கினார்

ஆந்தகுடி :- நாகை மாவட்டம் கீழ்வேளூர் வட்டம், ஆந்தகுடியில் நடைபெற்ற சோரியாசிஸ், வெண்தழும்பு நோய்களுக்கான இலவச மூலிகை மருத்துவ முகாமை நாகை மாவட்ட வருவாய் அலுவலர் ராஜாமணி துவக்கி வைத்து மருத்துவர் மணிவாசகத்தின் சேவையை பாராட்டினார்.

இலவச மூலிகை மருத்துவ முகாம் நடத்த விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 04366 - 275372.

நற்பணி செய்வோம்! நாடு சிறந்திட!!

## டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் சார்பில் மாதந்தோறும் அம்பகரத்தூர், காரைக்காலில் இலவச மூலிகை மருத்துவ முகாம்

டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் சார்பில் மாதந் தோறும் அம்பகரத்தூர், காரைக்காலில் இலவச மருத்துவ முகாம் :-

அம்பகரத்தூர்
ஆங்கில மாத முதல் ஞாயிறு
சன்மார்க்க சங்கம்,
பெருமாள் கோவில் தெரு.
ஏற்பாடு :
எ.எஸ்.பி. சாமி

காரைக்கால்
ஆங்கில மாதம் 5-ம் தேதி
ஏகஜோதி ஞான சபை
ஆறாவது தெரு, நேரு நகர்
ஏற்பாடு :
தவத்திரு காளிதாஸ்

நாடுங்கள்! நலம் பெறுங்கள்!!


படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

நவம்பர் - 2002 இதழை நண்பர் ஒருவர் வீட்டில் பார்த்தேன். தாய்த் தமிழ் வளர்ச்சிக்கு தனது தளிர்க் கரங்களால் உதவ முயலும் இச் சஞ்சிகை பெருமைக்குரியது. தமிழ் இனத்தையும், மொழியையும் செயலிழக்கவும், பெருமை குன்றவும் வைக்க முயற்சிக்கும் ஒரு கூட்டம் இன்று வேகமாக கிளம்பியுள்ளது. அதன் வெளிப்பாடே ஆலயங்களில் தமிழ் (அர்ச்சனை) வழிபாட்டை காஞ்சி மட அதிபதி விமர்சித்ததும், மெரினா கடற்கரையில் பெருமைசாற்றி நின்ற கண்ணகி சிலை களவாடப்பட்டதும். இச்சூழ்நிலையில் தமிழ்மொழியின் கேடயமாக 'ஏழைதாசன்' போன்ற சஞ்சிகைகள் செழிக்க வேண்டியது அவசியம்

சு. செந்தில்வேல், கோவில்பத்து, நாகை.

இன்றுதான் என் முகவரி தேடி ஏழைதாசன் வந்தான். இதற்கு முன்னர் டென்மார்க் பொன்னண்ணா மூலமாகவும் ஏழைதாசன் இதழ் ஒன்றை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மூர்த்தி சிறியதானாலும கீர்த்தி பெரிது. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது. ஏழைதாசன் நல்ல முயற்சி தமிழுக்கு இன்னுமொரு வளமாக்கு

மட்டுவில் ஞானக்குமாரன், யேர்மனி.

நூலக சாதனையாளர் என். செல்வராசா அவர்களின் வரலாற்றினை வெளியிட்டது மகிழ்ச்சிக்குரியதாகும். அவரின் நூல்களை சென்னையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். வேலு சதானந்தத்தின் ஆண்டவனுக்கோர் அழைப்பு கவிதை கடவுள்களின் கபட வேடங்களை தோலுரித்து காட்டுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்து வெளியிடும் தாங்கள், தலையங்கம் எழுத வேண்டாமா?

மு. அந்தாலனார், ஆசிரியர், பயணம், விழுப்புரம்

மதிப்புக்குரிய எங்கள் ஏழைதாசன் அவர்களே, ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியாத நிலையில் 2 இதழ்கள் கிடைத்தன மட்டற்ற மகிழ்ச்சி. அவை வந்தபோது நான் கனடாவில் இல்லை அமெரிக்கா போயிருந்தேன். வந்தபின்தான் உங்கள் இதழ்கள் கண்டேன். கண்டதும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

இணுவையூர் பத்மாவதி சீவரட்ணம், கனடா

இலங்கைத் தமிழர் இதழியல் வரலாற்றில் இடம் பெறும் நூலகவியலாளர் என். செல்வராஜாவின் அறிமுகம் சிறப்பு ம. தி. சாந்தன் சிறைக்கம்பிகளுக்குப்பின் இருந்தாலும் நம் உணர்வோடு கைபின்னிக் கொள்கிறார். 4 மற்றும் 5-ல் ஓர் சுய அவலம் வெளிப்பட்டு நம்மைச் சிலுவையில் அறைகிறது. அபாரமான அய்க்கூக்கள் அவை இரண்டும். ஆண்டவனுக்

www.padippakam.com

கோர் அழைப்பில் - முதலிரண்டு பத்திகளும் கவித்துவத்தோடு படைக்கப் பட்டிருக்கின்றன வேலு சதானந்தம் அவர்களால் - பின் கவிதை உரை நடைக்குத் தாவி விடுகிறது. குவைத் குயில்கள் அய்ந்தும்கூட உரை வாசத்துடன் இருந்தாலும் அவர்களின் தமிழ்நேசமும் கவிநேசமும் பாராட்டுக்குரியன. அவர்கள் தொடர்ந்து எழுதுவார்களானால் நல்ல கவிஞர்களாக மாறுவார்கள் - அகிலோதயனின் 'எதிர்வீட்டு சன்னல்' சான்று.

வெற்றிப்பேரொளி, திருக்குவளை.

திருமதி. விக்னா பாக்கியநாதனின் கைகுட்டைக் கவிதைகள் நன்றாக இருந்தன. (உ-ம்) ''பட்டாம்பூச்சி சிறுமி - கூட்டுப்புழுவாக வீட்டில் - உடல்கூறில் மாற்றம்'' வேலணையூர் பொன்னண்ணாவின் மின்-பாக்கள், அல்லையூர் சி. விஜயனின் உறவுகளே எல்லாமே மனதிலே நிறைந்தன.

வேலு சதானந்தம், பகரைன்.

புத்தகக் கண்காட்சியில் ஏழைதாசன் இதழ் பார்த்தேன். நீங்கள் படும் சிரமம் தெரிறது. உங்களுக்கு ஒரு நல்ல இதழைக் கொண்டு வருவதில் இருக்கும் பொருளாதாரச் சிக்கல் புரிகிறது. உங்கள் விடாமுயற்சியும், ஆர்வமும் இதயத்தைத் தொடுகிறது ஓராண்டுச் சந்தா இணைத்துள்ளேன்

சென்னை சிண்டிகேட் நியூஸ் சர்வீசுக்காக வைத்தியநாதன்.

ஏழைதாசன் இதழ் மாதந்தோறும் கிடைப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அதுமட்டுமின்றி டிசம்பர் மாத இதழில் எனது கவிதையினை பிரசுரம் செய்து ஏழைதாசனின் அன்பான இதயத்தை வெளிக்காட்டியுள்ளீர்கள்

அல்லையூர் சி விஜயன், இத்தாலி.

ம.தி. சாந்தனின் துளிப்பாக்கள் மிகவும் அருமை. ''பறவைகள் சிறகடிப்பு - பூட்டிய அறைக்குள் கைதி - நிலநடுக்கம்'' நெஞ்சை நடுங்க வைத்தன. மரண தண்டனை சிறைவாசிக்கு மரணம் குறித்த கவலையின் வெளிப்பாடே இந்த அய்க்கூ. ஏழைதாசன் இதழ் வழி கவிஞர்க்கு பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் ஆறுதல்கள்-

பொன். குமார், சேலம்-6.

---

# ஏழைதாசன்

✶ ஏழைதாசன் வங்கி இலக்கம், முகவரி : EALAIDHASON, A/C No. 90259, Indian Bank, Pudukkottai-1.

✶ ஆண்டுக்கு ரூ. 35/- ✶ வாழ்நாள் ரூ. 350/-

முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு
Address : 26, Adappanvayal 8th Street, Pudukkottai-622 002,TN,India

---



படிப்பகம்

www.padippakam.com

# வெளிநாட்டுச் செய்திகள்

கனடா கவிஞர் திரு. கந்தவனம் அவர்களுக்கு உலக பல்கலைக்கழகம் கலாநிதி பட்டமளித்த பாராட்டு விழா யேர்மனியில் நடந்தது
அப்போது கவிஞர் கந்தவனம் அய்ந்து நபருக்கு விநாயக விருது கொடுத்துக் கௌரவித்தார்
சமூகஜோதி த புவனேந்திரன் அவர்களுக்கு ஆன் மீகத் தென்றல் விருது கிடைத்தது.
யேர்மனி சர்வதேச இந்துமத குருபீடம் நடத்திய ஆன்மீகப் பெருவிழாவில் சர்வதேச பீடாதிபதி கலாநிதி சிறீ அய்யப்பதாச சிவாச்சாரியார் தம்பி புவனேந்திரனின் சமய, சமூகப் பணியை பாராட்டி பட்டாடை போர்த்தி கௌரவித்து சிவநெறிக் காவலர் பட்டம் த்ந்து பாராட்டினார்.

மியான்மர் (பர்மா) தமிழர் அறநெறிக் கழகத்தின் 24-ம் ஆண்டு பெண்மக்கள் எழுச்சி ஆண்டின் தமிழ்ப் பரிசளிப்பு விழா 4-1-2003ல் நடந்தது
தாய்க்குலத்தின் பெருமை சேர்க்க செல்வி கே. செல்வி தலைமையேற்க, தமிழ்நெஞ்சம் து. பரசு ராமன் விழாவைத் தொடங்கி வைத்தார்.
தன்னார்வத் தமிழ்த்தொண்டன் வீரபாண்டியன் பாராட்டுப் பெற்றார். அய்ந்து வயதுகூட நிறம்-பாத மழலையர் சோனியா, இரா கயல்விழிக்கும் (திருக்குறள்)சிறப்புப் பாராட்டுப் பெற்ற நிகழ்வோடு பரிசளிப்பும் கலைநிகழ்ச்சிகளும் நடந்தது

பிரான்சில் இருந்து அய்ரோப்பா முழுவதும் 24 மணிநேரமும் ஒலித்துக் கொண்டிருக்கும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரலாம் ஏ.பி.சி. தமிழ்ஒலி வானொலியில் ஏழைதாசன் வெளியிட்ட அய்க்கூ - 200-ல் இடம்பெற்ற கவிதைகள் அவப்போது பாடல்களுக்கு இடையிலும், நிகழ்ச்சிகளுக்கு முன் னும் பின்னும் இலக்கியப் பகுதியிலும் ஒலிபரப்பாகி வருகிறது.
அத்துடன் ஏழைதாசன் ஒவ்வொரு இதழும் அறி முகப்படுத்தப்படுகிறது. ஏ.பி.சி.க்கு நன்றி

www.padippakam.com


# அக்குபஞ்சர்

## மாற்றுமுறை மருத்துவப் பயிற்சி

ஒவ்வொரு மாதமும்
4 நாட்கள் கான்டாக்ட்
செமினார் வகுப்புகள்
மற்றும்
நேரடிப் பயிற்சி
காரைக்குடியில்
நடத்தப்படுகிறது.

6 மாதம், 1 வருடம் டிப்ளமா
பயிற்சிகள் ரெகுலர் மற்றும்
தொலைத் தொடர்புப் பயிற்சி

உடற்கூறு இயல்
சேர்க்கப்பட்ட
புதிய இரண்டாம் பதிப்பு
ரெய்கி அக்குபஞ்சர்
நூல் விலை ரூ. 125/-
(அட்டை உட்பட
பக்கம் - 290)

இடம்
' உங்கள் தாய் வீடாகிய '
அப்துல்லா மிஷன் மருத்துவமனை
காரைக்குடி.

அக்குபஞ்சர், காந்த சிகிச்சை, கொரியன் சுஜோக் அக்குபஞ்சர், டி-அடிக்ஷன், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஹிப்னோ யோகா, ப்ரானிக் சிகிச்சை, ரெய்கி - அக்கு சிகிச்சை, யோகா, தியானம், ரெஃப்லக்சாலஜி, நாடி பரிசோதனை Acu Touch போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## அக்குபஞ்சர் நிபுணர் பயிற்சி

டிப்ளமா பயிற்சி பெற்றவர்கள் மேற்படிப்பு பெறவும் பயிற்சி அளிக்கப்படும்

வகுப்புகள் நடத்தவும் டிப்ளமா சான்றுகள் வழங்கவும் ATAMA மூலம் அனுமதி பெற்றுள்ளோம். படிப்பு முடித்தவர்கள் மருத்துவம் செய்யலாம்.

ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.



'புரட்சிப்புயல்'
Dr. C. அப்துல்லாசேகு

**அப்துல்லா மிஷன் மருத்துவமனை,**
பெரியார் சிலை அருகில்,
காரைக்குடி - 630 001
செல் : 98424-23082, 98421-53895
தொலைபேசி : 04565-433735, (R) 438082, 437791


படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TAMIL MONTHLY ★ RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 ✹ 'Registered' No. PMG/CR/01/03-05/PDK




தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்க மாநாடு திருச்சியில் நடந்தது. 1998ம் ஆண்டு 'தாஸ்னா'வின் இரண்டாவது பரிசு பெற்ற ஏழைதாசன் இதழ் ஆசிரியர் எஸ். விஜயகுமார் முன்னிலையில் 2002ம் ஆண்டின் முதல் பரிசு பெற்ற 'யாதும் ஊரே' இதழ் ஆசிரியர் நா.வை. சொக்கலிங்கத்திற்கு நாம் தமிழர் இயக்க பொதுச் செயலாளர் உணர்ச்சிக்கவிஞர் சிங்காரவேலன் பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கிறார்.

நன்றி: தினகரன், தினபூமி

பெறுநர் திரு.

200.
Mr. S. MANOHARAN,
Ese. E-13,
210, Ave du 8 Mai 1945,
**93150-LE BLANC MESNIL,**
**FRANCE.**




ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு, இந்தியா.
Address : 26, Adappanvayal 8th Street, PUDUKKOTTAI - 622 002, TN, INDIA.

படிப்பகம்